**தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூலதன சொத்துக்களை கையேற்பதன் கீழான மீளாய்வாண்டினுள் தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் கொள்வனவு செய்ததாக ரூபா 57,831,661 குறிப்பிடப்பட்டிருந்த போதும், நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் (ஏசீஏ - 6 படிவத்தில்) மீளாய்வாண்டில் அச்சொத்துக்கள் கொள்வனவு ரூபா 55,231,136 வாக குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூபா 2,600,525 க்கான வித்தியாசம் இருந்தது. | காரியாலய உபகரணங்கள் மற்றும் இயந்திரம், இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டினுள் செய்யப்படும் மொத்த செலவு சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மிகுதிக்கு பிழையின்றி சேர்த்தல் வேண்டும். | நிதியல்லா சொத்துக்கான கூற்றில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களுக்கான பெறுமானம் சரியானது. கணினி முறைமையினைக்கு சொத்தினை கொள்வனவு செய்தமைக்கான தனிப்பட்ட தகவல்களை மேற்கொண்டு செல்வதில் ஏற்பட்ட தவறுதலாக திசெம்பரில் கொள்வனவு செய்த சொத்துக்களின் விபரம் திறைசேரி படிவத்தில் காட்டப்பட்டுள்ள பெறுமதி குறைவாக காண்கிறது. |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதியல்லா சொத்திற்கான கூற்றில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு தளபாட மிகுதி ரூபா 180,536,027 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிதியல்லா சொத்துக்கான திறைசேரி படிவத்தில் (படிவம் SA 82) அந்த பெறுமானம் ரூபா 179,204,431 ஆக காட்டப் பட்டிருந்தமையினால் ரூபா 1,331,596 க்கான வேறுபாடு இருந்தது. | திறைசேரி படிவத்தின் மிகுதிகள் மற்றும் கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள மிகுதிகள் இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். | நிதியல்லா சொத்துக்கான கூற்றில் காட்டப்பட்டுள்ள பெறுமானம் பிழையன்று கணனி முறைமையினைக்கு சொத்துக்களை கொள்வனவு சம்பந்தமான தனிப்பட்ட தகவல்களை மேற்கொண்டு செல்வதில் ஏற்பட்ட தவறுதலினால் திசெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரம் திறைசேரி படிவத்தில் காட்டப்பட்டுள்ள பெறுமானம் குறைவாக காண்கிறது. |
| (ஆ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 271/2019 கொண்ட பொதுக் கணக்கு சுற்றறிக்கையில் 3.3 பந்தியின் படி நிதியல்லா சொத்திற்கான பிரதான பேரேட்டு மிகுதியுடன் தனிப்பட்ட சொத்திற்கான மிகுதிப் பெறுமானம் இணங்க வேண்டியிருந்த போதும், சொத்துக்கான 06 மிகுதிகளில் ரூபா 1,111,061,554 க்கான வேறுபாடு இருந்தது. | சுற்றறிக்கையின் படி செயல்பட வேண்டும். | திறைசேரி கணனி நிரந்தர சொத்துக்களில் தானியங்கி சம்பந்தமான வழுக்கள் காரணமாக ஒரே சொத்தெண், சொத்துருப்படி சிலவற்றில் குறிக்கப்பட்டிருப்பதால் திறைசேரி கணனி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து அவ்வுரப்படியினை நீக்க முடியாமல் உள்ளது. அதனால் இவ் வேறுபாடு நேர்ந்துள்ளது. |

### 1.6.3 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 104(1)(அ) | மீளாய்வாண்டில் நேர்ந்துள்ள 18 வாகன விபத்துக்கள் சம்பந்தமான காப்பீடு தொகை ரூபா 1,808,594 வாக இருந்ததுடன் அவ்விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணப் படி செயல்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்தொன்று நடந்தவுடன் அதற்கு பொறுப்பான தரப்பினர், நிஷ்டஈடு மற்றும் காரணிகளை நிச்சயித்து அறிந்து கொள்வதற்கு நிதிப் பிரமாணப் படி செயல்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டினுள் நேர்ந்துள்ள 18 வாகன விபத்துக்களில் இதுவரை 07 வாகன விபத்துக்களுக்கான விசாரணை நடாத்தப்பட்டுள்ளது. மிகுதி 11 விபத்துக்களுக்கான விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஏப்ரல் 8 ஆந் திகதிய இலக்கம் 03/2019 மற்றும் 2019 யூன் 17 ஆந் திகதிய இலக்கம் 04/2019 கொண்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை மூலம் மின்சாரம், நீர், தொலைபேசிச் சேவை, எரிபொருள் கொள்வனவு மற்றும் ஏனைய ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் சம்பந்தமான முறையான செலவின கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை பேணப்பட வேண்டியுள்ளதாக ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், எரிபொருள் மற்றும் மின்சார செலவின விடயங்களில் வருடாந்த ஒதுக்கீட்டு வரையறையினை விஞ்சி | சுற்றறிக்கைக்கு அமைவாக செலவின கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை பேணப்படுதல் ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்த ரினாலும் செய்யப்பட வேண்டும். | நாடு முழுவதிலும் அமைந்துள்ள நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகளுக்கு தொற்றும் மற்றும் குற்றங்களுடன் தொடர்புடைய இடங்களை கட்டாய சோதனையிடுவதற்கான அத்தயாவசிய பயணங்களுக்கு மட்டும் செலவிடுவதன் மூலம் எரிபொருள் செலவினை இவ்வளவில் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. மேலும், இத்திணைக்களம் 10 விஞ்ஞான ஆய்வு கூடங்களை கொண்டதுடன் அதில் குளிர்கூட |

| | | |
|---|---|---|
| முறையே ரூபா 19,929 மற்றும் ரூபா 1,589,929 க்கான செலவு செய்யப்பட்டுள்ளது. | | வசதியுள்ள ஆய்வு கூடங்கள் மற்றும் இரவு நேரத்திலும் உபகரண சாதனங்கள் செயல்படும் ஆய்வுகூடங்களில் உரிய வெப்ப நிலையினை 24 மணி நேரம் முழுவதும் செயல்படுத்த வேண்டியுள்ளது. ஏனைய சாதனங்கள் மற்றும் அத்தியவசியப்படாத சாதனங்களை செயல் இழக்கச் செய்து இச்செலவினை இவ்வெல்லையில் வைத்துக் கொள்வதற்கு முடியுமாயிற்று. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94(1) க்கு முரணாக நிதியாண்டுக்காக ஏற்படுத்தி இருந்த ஒதுக்கீட்டு வரையறையினை விஞ்சி ஒரு செலவின விடயத்திற்காக ரூபா 848,488 க்கான பொறுப்பினை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) க்கு முரணாக எவ்வித செலவினத்திற்கு அல்லது இணக்கப்பாட்டிற்கு இணங்காது இருத்தல் வேண்டும். | தேவைப்பாடுகளை கவனத்திற் கொண்டு இப்பொறுப்பினை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. |

**2.3 இணங்காமைக்கான முற்பண மிகுதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ACA 5 படிவத்தில் முன்வைத்துள்ள முற்பண கணக்கிற்கான 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு திறைசேரி ஏட்டின்படி அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மிகுதி மற்றும் திணைக்கள ஏட்டின் படி அம்மிகுதிகளுக்கிடையிலான ரூபா 20,659 க்கான | முற்பண "பீ" கணக்கின் முரண்பாட்டினை தேவையான திருத்தம் செய்யப்பட வேண்டும். | இம்முரண்பாட்டினை ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு 2018 மே 07 ஆந் திகதி நிதி அமைச்சின் செயலாளர் மூலமாக பொது நிதிப் பணிப்பாளர் அதிபதியிடம் அறிவிக்கப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| முரண்பாட்டினை 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | | போதும் ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் பல்வேறு பிரிவுகளிலிருந்து வழக்கு விடயத்திற்காக நிபுணத்துவ பதிவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கோரப்பட்ட 11,687 பதிவுகளில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பெற்றுக் கொடுக்க முடியாது போய் இருந்ததுடன் மீளாய்வாண்டினுள் 43,229 பதிவுகள் நீதிமன்றங்களினால் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டினுள் நீதிமன்றங்களுக்கு 40,745 பதிவுகள் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் 14,171 பதிவுகள் பெற்றுக் கொடுக்க முடியாமல் இருந்தது. அதன்படி பெற்றுக் கொடுக்க முடியாது போன பதிவுகளின் அளவு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 18 ஆல் வளர்ச்சியடைந்து இருந்தது. | வருடாந்தம் வழக்குகள் அதிகரிக்கும் மற்றும் பதிவுகளை பெற்றுக் கொடுக்கும் அசைவினைக்கு நேரொத்த பதிவுகளை சமர்ப்பிப்பதனை கூட்டுவதற்கான முறையொன்றினை இனங்கண்டு செயல்படுத்த வேண்டும். | உதவிப் பகுப்பாய்வாளர் பதவிகள் 31 புதிதாக அங்கீகரித்தல் மற்றும் அப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் வார இறுதி விடுமுறை நாட்களில் பணியினை மேற்கொள்ளல் ஆகியவற்றின் ஊடாக பதிவுகள் தாமதமாவதனை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (i) இல் 2003 வருடத்தில் | முன்னைய வருடங்களுக்கான இழப்புக்கள் சேதங்கள் | ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| சொத்துக்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 2,229,111 க்கான நட்டங்கள் மற்றும் 2018 வருடத்தினுள் வாகன விபத்துக்களில் ரூபா 466,462 க்கான நட்டத்தினை அறவிடப்படவுள்ளதாக அறியத்தரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் மேற்படி நட்டங்களுக்கான விபரங்கள் உள்ளாக்கப்பட்டிருக்காததுடன் அந்நட்டங்களை அறவிடப்படுவதது அல்லது ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதற்கான விபரங்கள் திணைக்களத்தினால் பேணப்பட்ட சேத நட்ட அட்டவணைப் படி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாது போயிற்று. | மிகுதிகளிலிருந்து அறவிடுதல் அல்லது தள்ளுபடி செய்தல் அல்லது முன்னெடுத்துச் செல்லும் மிகுதிகளை வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். வாகன விபத்துக்களினால் நேர்ந்துள்ள இழப்புக்களை தற்போதைக்கு காப்புறுதி கம்பனியினால் சமப்படுத்தப்பட்டுள்ளது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்திலான 55 வெற்றிடங்கள் இருந்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 40 க்கான வீதமாக இருந்தது. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்காமை திணைக்களத்தின் செயலாற்றலினைக்கு நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அப்பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலையத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கிய காரியங்களை பயனுள்ள வகையில் நிறை வேற்றுவதற்கான மிக அவசியமான சிரேண்ட மட்டத்திலான பதவிகள் தொடர்பான பணிக்குழாமினை சேர்த்துக் கொள்வது முதன்மை காரியமாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |